மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களுக்கு முட்டைகளை வழங்குவதற்கு ஒரு குறிப்பிட்ட விலை நிர்ணயம் செய்யப்படவில்லை. அந்தந்த வாரம் N.E.C.C. —'National Egg Co-Ordination Committee' முட்டைகளுக்கு என்ன விலையை நிர்ணயம் செய்திருக்கிறார்களோ, அந்த விலையோடு போக்குவரத்துச் செலவாக 5 பைசா சேர்த்துத் தரப்படுகிறது.

கூடலூர் பேரூராட்சிப் பகுதிக்குக் குடிநீர்.

* 627 திரு. எம். கே. கரீம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் பேரூராட்சிப் பகுதிக்குக் குடிநீர் வழங்க உலக வங்கி உதவியுடன் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திட்டப் பணிகள் நடந்து வருகின்றன.

திரு. எம். கே. கரீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் உதவியோடு 11—8—1987-ஆம் ஆண்டில் ரூ. 2,821 இலட்சம் செலவில் நடைபெறவிருக்கும் 'ஹெலன் வாட்டர் ஸ்கீம்' இதுவரையிலும் முறையான வகையில் வேலையைத் துவங்கவில்லை. அது எப்போது துவங்கப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1987-லே துவக்கப்பட்டாலும் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் சென்ற ஆண்டு நேரிலும்கூட சென்று இந்தப் பணிகள் துவக்கப்படுவதற்கு விரைவுபடுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டதன் விளைவாக இப்போது அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அடுத்த மாதம்

கூட நேரடியாக குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய இயக்கு நரும், நானும் சென்று அந்தப் பணிகளைப் பார்வையிட இருக்கிறோம். இந்தப் பணிகள் செப்டம்பர் மாதம் 1991-க் குள்ளாக முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எம். கே. கரீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987-ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டு, மூன்று ஆண்டுகளாக இது 4 ஸ்டேஜ்களாக .கோக்கல் 30 ஆயிரம் லிட்டர், எல்.பி.எம். என்பது 1,50,000 லிட்டர், கூடலூர் பசார் 2 இலட்சம் லிட்டர், தேவர்சோலை - 10 மைல், 60,000 லிட்டர் என்ற அடிப்படையில் தொட்டிகள் கட்டப்பட வேண்டும். இந்த 3 ஆண்டுகளாக தேவர்சோலை—10 மைல் என்ற இடத்தில் மட்டும்தான் ஒரேயொரு தொட்டியைக் கட்டியிருக்கிறார்கள், இந்த அளவில் 3 ஆண்டுகளுக்கு ஒரு தொட்டி என்ற கணக்கில் இனி மீதியிருக்கக்கூடிய 3 தொட்டிகள் வருவதற்கு ஏறத்தாழ 9 ஆண்டுகள் ஆகுமா என்று நான் சந்தேகிக்கிறேன். (குறுக்கீடு)

10-05 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞருடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஒரு ஆண்டு ஆகிறது. இந்த ஒரு தொட்டி கட்டப்பட்டது, இந்த ஓர் ஆண்டிலேதான். ஆகவே மற்ற பணிகள் விரைவுபடுத்தப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிநீர்த் திட்டம்

* 3053—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கீழப்பாவூர் ஒன்றியப் பகுதிக்குச் சிற்றாற்றிலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டப் பணி முடங்கியுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கீழப்பாவூர் பேரூராட்சிக்கு மட்டும் சிற்றாற்றிலிருந்து குடிநீர் வழங்குவதற்காக ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன,